


‘கலைஞர்’ செய்திகள் தொலைக்காட்சி பிரிவுத் தலைவர்

# ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்கள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு சிறப்புரை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி – நூல்களைப் பெற்றுக் கொள்கிறார்!

**சென்னை, டிச. 21-**

**‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சி பிரிவுத் தலைவர் ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்களை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.**

**அந்நூல்களின் முதற்படிகளை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டு வாழ்த்தி உரையாற்றுகிறார்.**

இவ்வினிய விழா பற்றிய விவரம் வருமாறு:-




‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சிப் பிரிவுத் தலைவரும் எழுத்தாளருமான ப.திருமாவேலன் - “தீரர்கள் கோட்டம் தி.மு.க.” - “திராவிட அரசியல் - திராவிட அரசு இயல்” - முறை செய்து காப்பாற்றும் முதலமைச்சர்” ஆகிய மூன்று நூல்களை எழுதியுள்ளார்.

இந்நூல்களின் வெளியீட்டு விழா நாளை (22.12.2025 - திங்கள் கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை - கோட்டூர்புரம் - பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, விழாவுக்குத் தலைமை வகித்து, ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்களையும் வெளியிட்டுச்சிறப்புரையாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், அந்நூல்களைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் - ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.யும் வாழ்த்தி உரையாற்றுகிறார்.

முன்னதாக - திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் - பேராசிரியர் சுப.வீரபாண்டியன், நூல் அறிமுகவுரையாற்றுகிறார்.

கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் இயக்குநர் பெல்.கு.ராஜன், கவிதா பப்ளிகேஷன்ஸ் சேது சொக்கலிங்கம் உள்ளிட்டோரும் இவ்விழாவில் கலந்து கொள்கிறார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திண்டுக்கல் மாவட்டத்திற்கு வளர்ச்சித்திட்டபணிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தர உள்ளதை முன்னிட்டு, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள வட்டார போக்குவரத்து மைதானத்தினை பார்வையிட்டனர். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பிரதீப், பழனி சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பெ.செந்தில்குமார், வேடசந்தூர் காந்தி ராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி இரா.ஜெயபாரதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி உட்பட பலர் உள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் காளாஞ்சிப்பட்டி கலைஞர் நூற்றாண்டு போட்டி தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று குரூப் – 4 தேர்வில் வெற்றி பெற்று பணி நியமனஆணை பெற்றவர்களை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு, அவைத்தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட பயிற்சி மைய ஆசிரியர்கள், நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



நாகர்கோவில் மாநகராட்சி 41வது வார்டுக்குட்பட்ட வட்டவிளை பகுதியில் பொதுமக்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் மாநகராட்சி ஆணையாளர், அதிகாரிகளுடன் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி பொறியாளர் சுஜின், மாமன்ற உறுப்பினர் அனிலா சுகுமாறன், சுகாதார அலுவலர் ஸ்டேன்லி குமார், பகுதி செயலாளர் மு.சேக்மீரான், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.